**தலைப்பு 300 – உணவு ஆணையாளர் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஒக்தோபர் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை

தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் பிரமான கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்லான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| நிதிச்செயலாற்றல் கூற்றில் ரூபா 203,819,838 க்கான, ஏனைய பெறுவனவு மீதியினுள் உணவுக் கொள்வனவு மற்றும் விநியோகக் கலைப்பு முற்பண கணக்கினை மீளாய்வு ஆண்டில் முடிக்கப்பட்டு பொது வருமானத்தில் மாற்றப்பட்ட ரூபா 76,673,230 க்கான மேய்வு ஒதுக்கல் நிதிய மீதியும் உட்பட்டு இருந்தது. | நடவடிக்கை செயற்பாடுகளிலிருந்து கிடைக்கப் பெற்ற ஏனைய பெறுவனவு மீதியினை தெளிவாக இனங்காணக் கூடியவாறு கணக்கிலிடப்பட வேண்டியமை. | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 வருடம் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 347,410,000 க்கான கட்டிட பெறுமதியினை நிதி நிலைமை மீதான கூற்றில் சொத்து பொறி மற்றும் உபகரண பெறுமதியினுள் உட்பட்டு இருக்கவில்லை. | சொத்து பொறி உபகரண பெறுமானம் சரியாகக் கணக்கிலிடப்பட வேண்டியமை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மொத்த சதுர அடி 479,603 ஆன 34 கட்டிடங்கள் மற்றும் 07 மாவட்டங்களில் உள்ள 14 காணித் துண்டுகளை மதிப்பீடு செய்து திணைக்களத்தின் சொத்தாக கணக்கிலிடப்பட்டு இருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான கட்டிடங்கள் காணிகள் சரியாக கணக்கிலிடப்பட வேண்டியமை. | ஏற்றுக்கொள்கின்றேன். பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2019 திசெம்ர் 31 ஆந் திகதி தம்புள்ளையில் வெப்ப நிலை தடுப்பு களஞ்சியத்தினை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 188,567,539 க்கான பெறுமதியினை முடிவுறா அலுவலுக்கான சொத்தாக மற்றும் மூலதன சொத்துக்களான ஒதுக்கங்களாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்படவில்லை. | முடிக்கப்படா நிலையில் உள்ள சொத்துக்கள் மற்றும் மூலதன ஒதுக்கங்கள் சரியாக கணக்கிலிடப்பட வேண்டியமை. | நிதிக் கூற்றில் இணைப்பாக உட்படுத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி தம்புள்ளை வெப்ப நிலை களஞ்சியத்தினை நிர்மாணிப்பதற்காக சம்பந்தப்பட்ட தீர்ப்பனவு செய்யப்படாத ரூபா 48,659,281 க்கான முற்பணத்தினை நிதி நிலைமை மீதான கூற்றில் காட்டப்படவில்லை. | தீர்ப்பனவு செய்யப்படாத முற்பண பணத்தினை சரியாக கணக்கிலிடப்பட வேண்டியமை. | நிதிக்கூற்றில் இணைப்பாக உட்படுத்தப்பட்டுள்ளது. |

**1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கில் திணைக்கள புத்தகங்களின் படி மற்றும் திறைசேரி கணினி அச்சக் குறிப்புக்களின் படி ரூபா 332,250 க்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. அவ்வித்தியாசத்தினை 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சீர்செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைசேரி புத்தகங்கள் இடையே நிலவும் வித்தியாசத்தினை சீர்செய்து கொள்ளப்பட வேண்டியமை. | முன்னைய வருடங்களிலிருந்து நிலவி வரும் வித்தியாசமாகையால் வித்தியாசத்திற்கான காரணத்தை இணக்காண முடியாதுள்ளது. |
| (ஆ) | 2016 பெப்ரவரி 12 ஆந் திகதிய இலக்கம் 02/2016 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக 21 உத்தியோகத்தர் களிடமிருந்து 20 வருடங்களுக்கு அதிக காலமான அறவிடப்படவேண்டிய ரூபா 739,967 க்கான நிலுவைக் கடன் மிகுதிக்கான தகவல்களை கண்டுபிடிக்க முடியாது போனமையினால் சேதம் மற்றும் இழப்பாக | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக் கமைவாக இருக்க வேண்டியமை. | 2020 கணக்கினை தயாரிக்கும் போது வழுவினை திருத்தப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். |

கருதப்பட்டு திணைக்கள தலைவரின் அனுமதியுடன் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

**1.6.4 கொடுக்கல் வாங்கல்களை கணக்கொழிப்புச் செய்யும் முற்பணக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| உணவு கொள்வனவு மற்றும் விநியோகத்திற்கான கலைப்பு முற்பண கணக்கில் அறவிட முடியாத கடன்பட்டோர் மற்றும் அன்றாட இழப்புக்களை பதிவழிப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 200 க்கான மில்லியன் ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அவ் ஒதுக்கீடுகளை தீர்மானப்படி கணக்கினை முடிக்கப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி திணைக்களத்தின் புத்தகப் படி உணவு கொள்வனவு மற்றும் விநியோக முற்பண கணக்கில் மீதியொன்று இல்லாது இருந்த போதிலும், திறைசேரி புத்தகங்களின் படி அதன் மீதி ரூபா 1,719,406 ஆக இருந்தது. | தகுந்த முறையில் திட்டமிடப்பட்டு வருடாந்த ஒதுக்கீடுகள் கோரப்பட வேண்டியமை மற்றும் திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைசேரி புத்தகங்களுடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டியமை. | திறைசேரியுடன் கலந்துரையாடப்பட்டு எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் தேவையினை இனங்கண்டு முன்னே மதிப்பிட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். அவ்வாறாயினும், ஒரு | தேவைப்பாட்டினை இனங்கண்டு முன்னே மதிப்பிட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. | வேயங்கொடையில், கொள்ளளவு மெ.டொ. 50,000 களஞ்சியப்படுத்துவதற்காக தாபிக்கப்பட்டுள்ள விஞ்ஞான ரீதியான 06 |

| | | | |
|---|---|---|---|
| | மீண்டெழும் செலவின விடயத்திற்காக மீளாய்வு ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து நூற்றுக்கு 35 ஆன மிகை ஒதுக்கீடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. | | களஞ்சிய சாலைகளுக்காக மின்சார ஒதுக்கீடு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அரிசியினை களஞ்சியப் படுத்துவதற்கான அரசின் கொள்கை மேற்கொள்ளப்படும் முடிவுகளின் படி மாற்றம் அடைவதால் ஒவ்வொரு கால கட்டத்தில் அரிசித் தொகையில் மேல் மிகுதி ஏற்டும் சந்தர்ப்பங்களில் அரிசியினை களஞ்சியப்படுத்துவதற்காக இவ் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 208 பிரகாரம் வெளிநாட்டு கொடையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 99,820,040 க்கான செலவு நிதிக்கூற்றுக்களில் திணைக்கள ஒதுக்கீடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினமாக கணக்கிலிடப்பட்டு இருந்தது. | கணக்கு வைப்பினை சரியாக மேற்கொள்ளப்பட வேண்டியமை. | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் திருத்துவேன். |
| (இ) | மீளாய்வாண்டில் குறை நிரப்பு மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டு பெறுவனவு ரூபா 400,000,000 ஆயினும், ரூபா 195,000,000 என காட்டப்பட்டு இருந்தது. | கணக்கு வைப்பினை சரியாக மேற்கொள்ளப்பட வேண்டியமை. | இணங்குகின்றேன். |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ஓய்வுபெற்ற, மரணமடைந்த, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட, வேலையை விட்டு விலகிச் சென்ற 19 உத்தியோகத்தர்களிடமிருந்து 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட | தாபன விதிக் கோவையின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியமை. | ஓய்வு பெற்றுச் சென்ற இரு உத்தியோகத்தர்களின் ஓய்வூதியத்திலிருந்து அறவிடக் கூடியதாக உள்ளதுடன் ஒரு உத்தியோகத்தரின் கடன் மீதி பிரதேச |

| | | |
|---|---|---|
| வேண்டிய ரூபா 1,213,414 கடன் மீதி 05 வருடங்களுக்கு மேலாக நிலுவையாக இருந்தது. | | செயலகத்திலிருந்து மற்றும் மற்ற உத்தியோகத்தரின் கடன் மீதியினை ஓய்வூதியத் திணைக்களத்திடமிருந்தும் வரவழைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தவணைப் பணம் செலுத்துவதுடன் ஏனைய உத்தியோகத்தர்களின் கடனை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கை மேற்கொண்டு இருப்பதுடன் ஏனைய உத்தியோகத்தர்கள் தொடர்பாக போதுமான தகவல்கள் இல்லாமையினால் எதிர்காலத்தில் அவைகளை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் முதன்மைக் காரியமான நெருக்கடி நிலைமையின் போது பாவனையினை மேற்கொள்வதற்காக மெ.டொ 100,000 க்கான காப்பு அரிசி ஒதுக்கல் ஒன்றினை பேணப்பட வேண்டும். அக்குறிக்கோளினை அடைந்து கொள்வதற்காக மெ.டொ 34,300 களஞ்சியப்படுத்தக்கூடிய வேயங்கொட தளத்தி 06 | நோக்கு மற்றும் பணியினை அடைந்து கொள்வதன் பொருட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய பொறுப்பினை முதன்மையாக மேற்கொள்ளப்பட வேண்டியமை. | அரிசிக்கான ஒதுக்கலினை பேணிச் செல்வதற்காக வருடாந்தம் வரவு, செலவு மூலம் ஒதுக்கீடு கோரப்பட்ட போதிலும், ஒதுக்கீடு பெற்றுத் தரப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | களஞ்சிய சாகைள் ரூபா 292,311,945 செவிடப்பட்டு விஞ்ஞான ரீதியான களஞ்சிய சாலைகளாக மாற்றப்பட்டன. அவ்வாறாயினும், 2013 ஆம் ஆண்டு பரீட்சார்த்த திட்டத்தின் சாத்தியத்தினை மதிப்பீடு செய்வதற்காக களஞ்சியப்படுத்தப்பட்ட மெ.டொ 668 அரிசித் தொகை முடிந்ததன் பின்னர் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிம் எவ்வித காப்பு அரிசித் தொகையும் திணைக்களத்திடம் இருக்கவில்லை. | | |
| (ஆ) | திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சியங்கள் மற்றும் மனைகள் தரமாக பாவனை செய்வதற்காக மேலதிக களஞ்சியங்கள் மற்றும் மனைகளை மதிப்பீடு செய்யப்பட்டு அம்மதிப்பீட்டினை அடிப்படையாக வாடகைக்கு பெற்றுக்கொடுப்பதன் மூலம் பொது வருமானத்திற்கு பங்களிப்பினை பெற்றுக் கொடுப்பது திணைக்களத்தின் முக்கிய அலுவலாக இருந்த போதிலும், இது தொடர்பான எவ்வித திட்டமும் நடைமுறை திட்டத்தினுள் உட்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | முக்கிய காரியங்களை நிறைவேற்றி கொள்ளும் விதமாக நடைமுறைத் திட்டத்தினை தயாரிக்கப்பட வேண்டியமை. | 2019 ஆம் ஆண்டு நடைமுறைத் திட்டத்தினுள் உட்படுத்தப்பட்டிராத போதிலும், 2019 ஆம் ஆண்டு திணைக்கள களஞ்சியங்களை வாடகைக்கு விட்டதன் மூலம் ரூபா 95,513,144.92 க்கான வருமானம் மற்றும் திணைக்கள வீடுகளை வாடகைக்கு விட்டு ரூபா 6,127,997.62 க்கான வருமானம் ஈட்ட முடிந்தது. |
| (இ) | ஒருகொடவத்த, அம்பாறை, ஹம்பாந்தோட்டை, கஹந்தாவ, யாழ்ப்பாணம், நுவரெலியா, பதுள்ள இடங்களில் உள்ள களஞ்சியசாலை எதனையும் புதுப்பித்து இருக்கவில்லை. | முன்னேற்ற அறிக்கையினை சரியாக தயாரிக்கப்பட வேண்டியமை. | கோரப்பட்ட ஒதுக்கீடு திறைசேரியிடமிருந்து கிடைக்காவிடினும் கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடுகளைக் கொண்டு சிராவஸ்திபுர, பூஸ்ஸ மற்றும் மெதவத்த களஞ்சியங்கள் திருத்தப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறாயினும், நடைமுறைத் திட்டத்திற்கு அமைய களஞ்சிய திருத்தத்திற்காக ரூபா 311.58 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தில் நிதி முன்னேற்றம் 93.25 ஆகவும் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 100 ஆகவும் முன்னேற்ற அறிக்கையில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | நடைமுறைத் திட்டத்தின் படி இயந்திர சாதனங்கள் கொள்வனவு செய்கையில் ரூபா 5.63 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தில் ரூபா 5.5 க்கான பொக்லிப்ட் இயந்திரத்தினை கொள்வனவு செய்யப்பட்டிராத பட்சத்தில் நிதி முன்னேற்றம் நூற்றுக்கு 99 ஆகவும் பௌதீக முன்னேற்றம் 99 ஆகவும் முன்னேற்ற அறிக்கையில் காட்டி இருந்தது. | முன்னேற்ற அறிக்கையினை சரியாக தயாரிக்கப்பட வேண்டியமை. | அரிசி ஒதுக்கீட்டினை பேணுதல் 2019 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப் படாமையினால் போகலிப்ட் கொள்வனவு மேற்கொள்ளப்படவில்லை. |
| (உ) | திணைக்களத்திற்கு சொந்தமான காணிகள், களஞ்சியங்கள், விடுகள் ஆகியவற்றுக்கான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் படியான வருடாந்த பௌதீக இலக்குகளை நூற்றுக்கு 100 ஆக நடைமுறைத் திட்டத்தில் காட்டி இருந்த போதிலும், மீளாய்வாண்டில் இதில் நூற்றுக்கு 30 மாத்திரம் அடையப்பட்டிருந்தது. | சட்ட நடவடிக்கை மேற்கொள்வதனை துரிதப்படுத்த வேண்டியமை. | சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் அலுவல்களின் போது முடிவு எடுக்கப்படுவது நீதிமன்றத்தினால் ஆகும். நீதிமன்றத்தினை கட்டுப்படுத்தும் அதிகாரம் திணைக்களத்திற்கு இல்லாமையினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் போது 100% முன்னேற்றத்தினை பெற்றுக் கொள்ள முடியாது போயிற்று. |

| | | |
|---|---|---|
| (ஊ) திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளின் உரிமையினை கையேற்கும் போது அடையப் பெற்ற இலக்கு நூற்றுக்கு 25 ஆக நடைமுறை திட்டம் தொடர்பான முன்னேற்ற அறிக்கையில் காட்டி இருந்த போதிலும், மீளாய்வு ஆண்டினுள் எவ்வித காணி உரிமையினையும் கையேற்கப்படவில்லை. | காணிகளை கையேற்கும் அலுவல் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | காணிகளின் உரிமைகளினை கையேற்பது தொடர்பான அலுவல் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் அவ்வலுவல் ஒவ்வொரு கட்டமாக தொழிற்பட்டு வருகின்றது. |

## 3.2 சொத்து முகாமைத்துவம்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் திணைக்களத்தின் காணி கட்டிடங்களின் பெறுமானம் ரூபா 4,659,567,477 ஆக இருந்த போதிலும், இக்காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையினை திணைக்களத்தினால் கையேற்கப்பட்டு இல்லாததுடன் காணி அதிகார சட்ட மூத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்படும் காணி உரிமப் பத்திரத்தினை பெற்றுக் கொண்டு இருக்கவில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையினை திணைக்களத்தினால் கையேற்கப்பட வேண்டியமை. | கையேற்கும் அலுவல் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அறவிடப்பட வேண்டிய ரூபா 89,462,175 க்கான களஞ்சிய வாடகையில் ரூபா 58,870,238 க்கான களஞ்சிய வாடகை பணத்தினை அறவிடப்பட முடியாது போனமையினர் | நிலுவை களஞ்சிய வாடகையினை அறவிடப்பட வேண்டியமை. | களஞ்சிய வாடகை பணத்தினை அறவிடுவதற்காக உரிய நடைமுறையின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பதுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இடையே ஞாபகமூட்டல் |

| | | | |
|---|---|---|---|
| | அக்களஞ்சியங்கள் திணைக்களத்தினால் கையேற்கப்பட்டிருந்தன. கையேற்கப்பட்ட களஞ்சியங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய களஞ்சிய வாடகைப் பணமான ரூபா 4,506,576 அறவிடப்படுவதற்கான வழக்குத் தொடரப்பட்டிருந்த போதிலும், அவ்வழக்குகளில் எதுவும் அறிக்கைத் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்பட்டு இருக்கவில்லை. மேலும், திணைக்களத்தினால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிராத, அறவிடப்பட வேண்டிய களஞ்சிய வாடகைப் பணம் ரூபா 54,369,662 தொடர்பாக கீழுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்துடன் வாய்மூல பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு தீர்வு ஏற்படுத்திக் கொண்டு உள்ளதுடன் இறுதியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. |
| (i) | இலங்கை சதொச நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த 09 களஞ்சிய சாலைகள் தொடர்பாக 2014 செப்தெம்பர் முதல் 2016 திசெம்பர் வரை அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகைப் பணம் ரூபா 22,607,500 ஆக இருந்தது. | நிலுவை களஞ்சிய வாடகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இலங்கை சதொச நிறுவனத்தினை அறிவுறுத்தப்பட்டுள்ளது. பதில் பெற்றுத் தரப்படவில்லை. |
| (ii) | கூட்டுறவுத் தொகை வியாபார கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட 09 களஞ்சியசாலைகள் தொடர்பாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகைப் பணம் ரூபா 27,234,985 ஆகும். | நிலுவை களஞ்சிய வாடகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வாடகையினை அறவிடும் படி நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குவதற்காக பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் சிற்றுண்டிச்சாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த வேலைகளை மேற்கொள்ளப்படாமல், தனியார் நிறுவனம் ஒன்றிற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக 2019 ஆகஸ்ட் 15 ஆந் திகதி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், அத்திகதிக்கு அதாவது 2019 நவம்பர் மாதம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு அமைய ரூபா 4,951,000 செலவிடப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டு இருந்த போதிலும், நவீனமயப்படுத்தப்பட்டதன் பின்பு சிற்றுண்டிச்சாலைக்காக புது மதிப்பீட்டு பெறுமானம் ஒன்றினை பெற்றுக் கொண்டு மாதாந்த குத்தகை பணத்தினை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாது 2015 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தது. | திருத்த வேலைக்காக ரூபா 6,000,000 க்கும் மேலான தொகை செலவிடப்பட்டிருந்த மையினால் புது மதிப்பீட்டு பெறுமானத்தினை பெற்றுக்கொள்ளப்பட வேண்டியமை. | மும்மூன்று வருடங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படுவதனை அறியத் தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெறுகையினை திட்டமிடுவதன் பலவீனம் மற்றும் திணைக்களம் சிற்றுண்டிச்சாலையை உரிய காலத்தில் திறக்காமை காரணமாக ரூபா 1,344,000 வாடகை வருமானம் கைநழுவி போய் இருந்தது. | வருட ஆரம்பத்தில் பெறுகை நடவடிக்கையினை முறையாக மேற்கொள்ளப்பட வேண்டியமை. | மனுதாரருக்கு முறையாக வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்வதற்கு ஒப்படைக்கப்பட்டு இருக்காமையினால் நிறுவன வாடகையினை அறவிடுவது நியாயம் அற்றதாக அவதானிக்கின்றேன். |
| (இ) | சென்ற ஆண்டில் சிற்றுண்டிச் சாலையை குத்தகைக்கு அறவிடப்பட்டு அறவிடப்பட வேண்டிய ரூபா 791,190 க்கான நிலுவை வாடகை பணத்தை அறவிடுவதற்கு கணக்காய்வு தினம் வரையிலும் முடியாது போய் இருந்தது. | நிலுவை குத்தகை வாடகையினை துரிதமாக அறவிடப்பட வேண்டியமை. | நிலுவை வாடகையினை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஈ) | வேயங்கொடை களஞ்சிய தளத்தில் களஞ்சியத்தினை நவீனமயப்படுத்தல்<br>---------------------------------------------- | | |
| (i) | சாதாரண நிலையில் உள்ள 06 களஞ்சியசாலைகளை விஞ்ஞான ரீதியான களஞ்சியமாக நவீனமயப்படுத்தும் போது மின்சார கொள்ளளவின் வோர்டேஜ் அளவினை 1000 வரையிலும் கூட்டப்பட்ட போதிலும், களஞ்சியங்களை பாவனை செய்வதற்கான குறித்த திட்டங்கள் செயல்படாததன் காரணமாக களஞ்சியங்கள் செயலிழந்து இருந்தன. அவ்வாறாயினும், மீளாய்வு ஆண்டில் ஒரு களஞ்சியத்திலாவது அரிசி களஞ்சியப்படுத்தப்படாது இருந்த போதிலும், 2019 சனவரி முதல் திசெம்பர் வரையிலும் மின்சாரத்திற்காக ரூபா 3,581,854 செலவிடப்பட்டிருந்தது. | களஞ்சியங்கள் செயலற்ற நிலையில் இருந்த போதிலும், மின்சாரத்திற்காக அதிக செலவு செய்யப்படுவதால் களஞ்சியங்களை பயன்படுத்து வதற்கான முறையான திட்டத்தினை தயாரிப்பதற்கான வழிமுறையினை தயாரித்தல் வேண்டும். | இணங்குகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இலக்கம் 01 மற்றும் 13 களஞ்சியங்களை திருத்துவது தொடர்பாக 181 தாமத நாட்களுக்காக ரூபா 4,886,004 தாமதக் கட்டணம் அறவிடப்படுவதற்கு ஆலோசனை நிறுவனத்தினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தினால் 31 நாட்களுக்கான ரூபா 819,704 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மேலும், விலை மனுப்பத்திரத்தின் 6.12 பந்திக்கு அமைய அக்களஞ்சியங்களில் இயந்திரம் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட காலத்தினுள் பாவனை செய்யப்பட்ட மின்சாரத்திற்காக மீள் நிரப்பு செய்யப்பட வேண்டிய ரூபா 2,518,085 க்கான மின் செலவினை 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீள்நிரப்பு செய்யப்பட்டிருக்க வில்லை. | உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவ ாறு தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டியமை மற்றும் விலை மனுப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மின் கட்டணத்தினை மீள் நிரப்பிக் கொள்ளப்பட வேண்டியமை. | ஒப்பந்தக்காரரின் வேண்டுகோளின் படி, ஒப்பந்த உடன்படிக்கை தொடர்பான பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு, ஒப்பந்த நிறுவனத்திற்கு 150 நாட்களுக்கான சலுகை காலத்தினை பெற்றுக்கொடுத்து 31 நாட்களுக்கான தண்டப் பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மின் கட்டணத்தினை மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | 2012 ஆம் வருடம் வேயங்கொடை விஞ்ஞான ரீதியான களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்துவதற்காக அரிசி தொகையினை பெற்றுக் கொள்ளும் அடிப்படையில் 2012 மற்றும் 2013 ஆம் வருடங்களில் அரிசி ஆலை சொந்தக்காரர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி பெற்றுத் தரப்பட வேண்டிய அரிசித் தொகையினை அரிசி ஆலை சொந்தக்காரர்களை | அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதனை அறியத் தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுத்தராமையினால் ஆலை சொந்தக் காரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 7,390,700 ஆகும். இது தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக 2017 வருடம் சட்டமா அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அறிக்கை திகதியில் உள்ளவாறாக வழங்குத் தொடரப்பட்டு இருக்கவில்லை. | | |
| (ஊ) | மீளாய்வு வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த தம்புள்ளை வெப்பக் கட்டுப்பாட்டு களஞ்சிய திட்டத்தின் செயற்பாடுகளுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான ஹெக்டயார் 2.0069 காணிகளை பயன்படுத்தப்பட்டு இருந்ததுடன் 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அக்காணியினை திணைக்களத்தினால் கையேற்கப்பட்டிருக்க வில்லை. | காணியின் உரிமையினை கையேற்கப்பட வேண்டியமை. | பதில் கிடைக்கப் பெற்று இருக்கவில்லை. |
| (எ) | மரக்கறி மற்றும் பழங்களுக்கு ஏற்படும் பின் அறுவடை சேதத்தினை குறைப்பது மற்றும் விலையில் ஏற்படும் ஏற்றம் இறக்கத்தினை குறைக்கும் நோக்கத்தோடு தம்புள்ளை வெப்பக் கட்டுப்பாட்டு களஞ்சிய திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 188,567,539 க்கான தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தினத்தில் உள்ளவாறாக பௌதீக | உடன்படிக்கைப் படி திட்டத்தின் வேலைகள் முடிக்கப்பட வேண்டியமை. | பதில் அனுப்பப்பட்டு இருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | முன்னேற்றம் 35.5 ஆக இருந்தது. | | |
| (ஏ) | வரையறுக்கப்பட்ட இலங்கை நுகர்வோர் கூட்டுறவு சங்கத்திற்கு உருளைக் கிழங்கு களஞ்சியப்படுத்துவதற்காக வேயங்கொடை இலக்கம் 08 விஞ்ஞான ரீதியான களஞ்சியத்தினை 2018 வருடத்தில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. உருளைக் கிழங்குத் தொகை அழுகிப் பழுதடைந்து நீர் கசிந்து களஞ்சியத்தின் இயந்திரங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் யாவும் சேதமடைந்து இருந்தன. அதன் காரணமாக இக்களஞ்சியத்தினை எவ்வித பாவனைக்கும் எடுக்க முடியாது இருந்ததுடன் இவ்வறிக்கையின் திகதியில் உள்ளவாறாக அதனை மூடிவிட்டு 1½ வருடம் கழிந்து இருந்தது. இக்களஞ்சியத்திற்கு ஏற்பட்டிருந்த இழப்பினை சம்பந்தப்பட்ட ஆலோசனை நிறுவனத்தினால் ரூபா 3,315,000 க்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இவ்வறிக்கையின் திகதியில் உள்ளவாறாக இழப்பினை அறவிடப்பட இயலாது இருந்தது. | இழப்பினை அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுத்தல் மற்றும் இழப்பினை அறவிடப்பட்டு திருத்த வேலைகளை மேற்கொண்டதன் பின்னர் களஞ்சிய சாலையினை நிர்மாணித்ததன் நோக்கத்தினை பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியமை. | இது தொடர்பான இழப்பினை தாமதமின்றி செலுத்துவதற்கான ஏற்பாட்டினை செய்யும் படி சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஐ) | கொள்ளளவு மெ.டொ.5400 ஆன வேயங்கொடை இலக்கம் 07 விஞ்ஞான ரீதியான களஞ்சியத்தினை மீளாய்வாண்டில் வட்டக்காயினை களஞ்சியப்படுத்துவதற்காக அரச நிறுவனம் ஒன்றிற்கு கொடுக்கப்பட்டிருந்தது. களஞ்சியப்படுத்தப்பட்ட | களஞ்சியத்தினை பாவனை செய்தமைக்கான நடவடிக்கை எடுத்தல் மற்றும் மின் செலவினை மீள் நிரப்புதல் செய்யப்பட வேண்டியமை. | மின் செலவினை மீள் நிரப்பு செய்வதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | கால எல்லைக்காக களஞ்சியசாலைக்காக சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து எவ்வித மீள் நிரப்புதலும் செய்யப்படாது திணைக்களத்தினால் ரூபா 1,207,339 க்கான செலவினம் செய்யப்பட்டிருந்தது.களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த வட்டக்கா தொகையில் நூற்றுக்கு 79.36 பழுதடைந்து இருந்ததுடன் அறிக்கையின் திகதியில் உள்ளவாறாக களஞ்சிய சாலையினை பாவனை செய்யப்படாமல் செய்லபடாது இருந்தது. | | |

## 3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம் மற்றும் பொறி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கொள்ளளவு மெ.டொ 10,800 கொண்ட வேயங்கொடை இலக்கம் 09 இயற்கை விஞ்ஞான ரீதியான களஞ்சியம் மற்றும் இலக்கம் 10 இயந்திரமய விஞ்ஞான ரீதியான களஞ்சியங்கள் 2019 சனவரி 01 முதல் திசெம்பர் 31 ஆந் திகதிவரை செயற்படாது இருந்தன. அரிசி காப்பு தொகையை பேணுவதன் நோக்கத்துடன் களஞ்சியங்களை நவீன மயப்படுத்தப்பட்ட போதிலும், அந்நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு அல்லது வாடகைக்கு விடப்பட்டு வருடாந்த | களஞ்சியங்களை திருத்துவதற்கான நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு தேவையான செயல்முறையினை தயாரித்தல் மற்றும் களஞ்சியபாவனை தொடர்பான திட்டம் வகுத்தல் மற்றும் அவையினை செயற்படுத்த வேண்டியமை. | அரிசி ஒதுக்கினை பேணுவதற்காக வருடாந்த வரவு செலவு மூலமாக ஒதுக்கீடு கோரப்பட்ட போதிலும், ஒதுக்கீடு ஒதுக்கப்படாமையினால் களஞ்சியங்களை பாவனை செய்வதற்கு இயலாது இருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டு வாடகை பெறுமதியான ரூபா 4,320,000 வருமானத்தினை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | | |
| (ஆ) | 2018 மற்றும் 2019 வருடங்களில் ரூபா 29,628,902 செலவிடப்பட்டு அநுராதபுர சிராவஸ்திபுரம் 02 களஞ்சியங்கள் திருத்தப்பட்டு 2019 ஆகஸ்ட் மாதம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு இருந்த போதிலும், இக்களஞ்சியங்களை திருத்துவதற்கு முன்னர் இருந்த களஞ்சியங்களின் ஆயுட்காலத்தினை பற்றி கவனம் செலுத்தாது திருத்தங்களை செய்யப்பட்டதன் பலனாக மீளாய்வு ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செயற்படாது இருந்தன. | களஞ்சியங்களை திருத்தப்படுவதன் நோக்கத்தினை அடைவதற்கு தேவையான செயல் முறையினை தயாரிக்கப்பட வேண்டியமை. | அரிசித் தொகையினை களஞ்சியப்படுத்தும் எதிர்பார்ப்பு இருந்த போதிலும், தேவையான ஒதுக்கீடு கிடைக்காமல் போயிற்று. |
| (இ) | 2018 மற்றும் 2019 வருடங்களில் காலி, பூஸ்ஸ 02 களஞ்சியங்களை திருத்துவதற்காக ரூபா 50,101,059 செலவிடப்பட்ட போதிலும், 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறான களஞ்சியங்களை பயன்படுத்துவது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | களஞ்சியங்களை திருத்தப்படுவதன் நோக்கத்தினை அடைவதற்கு தேவையான செயல் முறையினை தயாரிக்கப்பட வேண்டியமை மற்றும் களஞ்சியங்களை பாவனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அரிசித் தொகையினை களஞ்சியப்படுத்தும் எதிர்பார்ப்பு இருந்த போதிலும், தேவையினை ஒதுக்கீடு கிடைக்காது போயிற்று. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2018 வருடம் மாத்தறை மெவத்த களஞ்சியத்தினை திருத்துவதற்காக ரூபா 6,524,966 செலவிடப்பட்ட போதிலும், 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறாக களஞ்சியத்தினை பயன்படுத்துவது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | களஞ்சியங்கள் திருத்தப்படுவதன் நோக்கத்தினை இடைவதற்கு தேவையான செயன்முறையினை தயாரித்தல் மற்றும் களஞ்சியங்களை பயன்படுத்துவது தொடர்பாக முறையானன திட்டத்தினை வகுத்து அவைகளை செயற்படுத்தப்பட வேண்டியமை. | அரசு பலவித தேவைகளுக்காக களஞ்சியங்களை பயன்படுத்துகின்றது. |
| (உ) | வேயங்கொடை மாவட்ட தானிய களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த ரூபா 4,500,000 க்கான பாலம் தராசினை பயன்படுத்தப்படாது இருந்தமையினால் குறை பாவனை நிலையில் இருந்தது. | பாலம் தராசின் பாவனை தொடர்பாக முறையான திட்டத்தினை வகுக்கப்பட்டு அவையினை செயற்படுத்தப்பட வேண்டியமை. | சதொச அரிசி தொகையினை களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த கால எல்லையினுள் பாவனை செய்யப்பட்டிருந்தது. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2008 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய அமப/08/1481/342/016 கொண்ட அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைய திணைக்களத்தின் செயற்பாடுகளை மறுசீரமைக்கும் போது முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் மூலம் 18 பதவிகள் தொடர்பாக 229 ஊழியர்களுக்காக அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. அதற்கு மேலதிகமாக அனுமதிக்கப்பட்ட 03 பதவிகள் தொடர்பாக தரக்கட்டுப்பாட்டு அதிகாரி பதவிக்காக 2015 வருடத்திலும், தானிய ஆய்வு பதவிக்காக 2018 | பதவிக்கு தகுந்த கடமையினை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான செயன்முறை ஒன்றினை தயாரிக்கப்பட வேண்டியமை. | தேவையின் நிமித்தம் ஊழியர்களை சேர்த்துக் கொள்ளும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

வருடத்திலும் இரண்டு அதிகாரிகளையும் நியமிக்கப்பட்டு இருந்தன. அவ்வாறாயினும், திணைக்களத்திற்கு சொந்தமான காப்பு அரிசித் தொகையினை பேணப்படாமையினால் இவ் இரண்டு அதிகாரிகளுக்கும் வேறு கடமைகள்
கையளிக்கப்பட்டிருந்தன.